**செய்தி வெளியீடு எண்: 550** **நாள்: 16.08.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (16.8.2018) தலைமைச் செயலகத்தில், மதுரை மாவட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் உபகோயிலான தல்லாகுளம், அருள்மிகு ஐயப்பன் திருக்கோயிலில் 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானக்கூடம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 50 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்தர்களின் பொருட்கள் வைக்கும் அறை, பாதணிகள் பாதுகாப்பு அறை மற்றும் மின் பகிர்மான அறை ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத்திறனின் நிலைக் களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாத்து பராமரிப்பது, அன்றாட பூஜைகள் தங்கு தடையின்றி நடப்பதை உறுதி செய்வது, பக்தர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பது போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை மூலமாக முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மதுரை மாவட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் உபகோயிலான தல்லாகுளம், அருள்மிகு ஐயப்பன் திருக்கோயிலில் 3,712 சதுர அடி கட்டட பரப்பளவில், 100 பக்தர்கள் உணவு உட்கொள்ளும் வகையில் 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம்;

திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 1440 சதுர அடி கட்டட பரப்பளவில், 50 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்தர்களின் பொருட்கள் வைக்கும் அறை, பாதணிகள் பாதுகாப்பு அறை மற்றும் மின் பகிர்மான அறை;

என மொத்தம் 1 கோடியே 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான இந்து சமய அறநிலையத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திருமதி ஆர். ஜெயா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 16.8.2018